ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் வைத் தலைவர் அவர்களே,

"1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாணிப (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 2/1993) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12.50

6. தீர்மானம்.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானம், மாண்புமிகு அவைமுன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் 25(1)-வது விதியின்படி பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கலாம் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்"

மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

தீர்மானம் [1993 பிப்ரவரி 13

ஏற்போர் ஆம் என்க (ஆம்)

மறுப்போர் - இல்லை என்க (இல்லை).

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது வணக்கம்

பின்னர் பேரவை பிற்பகல் 12-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

89-1991–92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/ 1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (தமிழ் ஆங்கிலம்)

90. 1991–92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 6/9 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ் ஆங்கிலம்)

91 1991-92ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ் ஆங்கிலம்)

92. 1990-91 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் பதினோறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956/619 ஏ பிரிவின் கீழ் முன்வைக்கப்பெற்றது] (தமிழ் ஆங்கிலம்)

93. 1986-87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)